**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**

# 22 திராவிட மாடல் அரசு

# சூழல் போற்றுதும்... சூழல் போற்றுதும்!








இது சூடான காலம். அரசியல் மட்டுமல்ல... சுற்றுச்சூழலும் கொதிப்படைகிற காலம். வீட்டை விட்டு வெளியே வந்தால், வெந்துவிடுவோமோ என்று அச்சப்படுகிற மக்களைக் காண முடிகிறது. முதல் நாள் 42 டிகிரி செல்சியஸுக்கு மேல் வெப்பம் இருந்தால், அடுத்த சில நாட்களில் 30 ஆகக் குறைகிறது. ஒன்றிரண்டு நாட்கள் கழித்து மீண்டும் வெயில் கொளுத்துகிறது.

பருவம் தப்பி மழை பெய்கிறது. அப்படிப் பெய்தால், பத்து நாட்களுக்குப் பரவலாகப் பெய்ய வேண்டிய மழை, ஒரே நாளில் பெய்து ஊரை வெள்ளக் காடாக்குகிறது. வெப்ப அலைகளால் மனிதர்கள் உயிரிழக்கிறார்கள் என்ற செய்திகளைக் கடந்த சில ஆண்டுகளாகக் கடந்து வருவது இயல்பாகிவிட்டது.

இதெல்லாம் தமிழ்நாட்டில் மட்டும் நிகழும் பிரச்சினைகள் அல்ல. உலகம் முழுவதுமே இது மாபெரும் பிரச்சினை. **‘குளோபல் வார்மிங்’** எனும் புவி வெப்பமயமாதல் பிரச்சினை அதிகரித்துக்கொண்டே போனால், அதனால் பனிப் பாறைகள் உருகி, கடல்மட்டம் உயர்ந்து, அதன் காரணமாக ஏற்படும் பாதிப்புகளை எப்படிச் சமாளிப்பது என்ற கேள்விக்குப் பதில் தெரியாமல், உலக நாடுகள் பல விழி பிதுங்குகின்றன.

**‘க்ளைமேட் சேஞ்ச்’** எனும் காலநிலை மாற்றத்தை தமிழ்நாடு ‘திராவிட மாடல்’ அரசும் மிக முக்கியப் பிரச்சினையாகக் கருதுகிறது என்பதன் அடையாளம்தான், இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலமும் முன்னெடுக்காத **‘காலநிலை மாற்ற இயக்கம்’** என்ற ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறது. அது மட்டுமல்ல, அதற்கென தனியே காலநிலை மாற்ற நிதி என்று 1,000 கோடி ரூபாயை 2022-2023 பட்ஜெட்டில் ஒதுக்கியுள்ளது.

## காலநிலை மாற்றத்துக்கு கவனம்

தமிழ்நாட்டின் பரப்பளவு 1 லட்சத்து 30 ஆயிரத்து 060 சதுர கிலோமீட்டர் ஆகும். அதில் வனப்பரப்பு 26 ஆயிரத்து 419 சதுர கிலோமீட்டர். இது மாநிலத்தின் புவிப்பரப்பில் 20.31 சதவிகிதமாகும். இந்தியாவில், பூ மற்றும் கனி தருகிற மூடியவிதைத் தாவர பன்மயம் 17ஆயிரத்து 672 இனங்களை உள்ளடக்கியுள்ளது. அதில் 5 ஆயிரத்து 640 இனங்களுடன் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதல் இடத்தில் உள்ளது. போலவே, 165 வகையான நன்னீர் மீன்கள், 76 வகையான நீர்நில வாழ்விகள், 177 வகை ஊர்வன, 454 வகையான பறவைகள் மற்றும் 187 வகையான பாலூட்டிகள் இருக்கின்றன.

இவ்வளவு இயற்கை வளங்களைப் பாதுகாக்க இங்கு, 5 தேசிய பூங்காக்கள், 17 வன உயிரின சரணாலயங்கள், 17 பறவைகள் சரணாலயங்கள், 5 புலிகள் காப்பகங்கள், 5 யானைகள் காப்பகங்கள், 3 ‘பயோ ரிசர்வ்’ என்று சொல்லப்படும் ‘உயிர்க்கோள் காப்பகங்கள்’ ஆகியவை இருக்கின்றன.

இவை அனைத்தும் காலநிலை மாற்றத்தால் பாதிப்புக்குள்ளாகும் அபாயங்கள் இருக்கின்றன. காலநிலை மாற்றத்தைப் பொதுவான பிரச்சினையாக அணுகாமல், அதற்குத் தனியாக முக்கியத்துவம் தர வேண்டும் என்பதால்தான், சுற்றுச்சூழல் துறையின் பெயர் **‘சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை’** என்று மாற்றப்பட்டுள்ளது.

## பசுமை காக்கும் முன்னெடுப்புகள்

தேசிய அளவில் காலநிலையைச் சமாளிக்க ‘காலநிலைத் திட்டம்’ இருப்பதுபோல, இதர மாநிலங்களுக்கு முன்னோடியாக இங்கு ‘மாநில அளவிலான காலநிலைத் திட்டம்’ உருவாக்கப்பட்டுள்ளது. அடுத்த பத்தாண்டுகளில், காடுகளின் பரப்பளவை 21 சதவிகிதத்தில் இருந்து 33 சதவிகிதமாக உயர்த்தவும் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. அதற்காக, 2.8 கோடி மரக் கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தவிர, உயிரிப் பன்மயத்தைப் பாதுகாப்பது என்ற அளவில், புதிதாக 13 சதுப்புநிலங்களுக்கு ‘ராம்சார்’ எனும் சர்வதேச அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. நம் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, ஒரே ஒரு சதுப்புநிலம் மட்டுமே இந்த அங்கீகாரத்தைப் பெற்றிருந்தது என்பது கவனிக்கத்தக்கது. மேலும், அழியும் நிலையில் உள்ள கடல்பசு, தேவாங்கு போன்ற உயிரினங்களைக் காக்க, புதிய காப்பகங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இவை அத்தனையும் நம் **‘திராவிட மாடல் அரசு’** 2021 மே மாதம் பொறுப்பேற்ற பிறகு நிகழ்த்தப்பட்ட சாதனைகள்.

## சூழல் காக்கும் தொலைநோக்கு

ஐந்தாண்டுகளுக்கு மட்டுமல்லாமல், இனி வரும் எல்லா தலைமுறைகளுக்கும் சேர்த்தே திட்டங்கள் தீட்டுவதுதான் கழக ஆட்சியின் இலக்கு. வளர்ந்த நாடுகள் பல பொருளாதார வளர்ச்சிக்காக தங்களின் சுற்றுச்சூழலைப் பலி கொடுத்து வருகின்றன. அப்படி இல்லாது, ‘இயற்கையுடன் இயைந்த வாழ்வும் வேண்டும். இயற்கையைக் கெடுக்காத வளர்ச்சியும் வேண்டும்’ என்ற முதல்வரின் தொலைநோக்குப் பார்வையை முன்னிட்டுத்தான், தமிழ்நாட்டில் இனி மேற்கொள்ளப்படும் அனைத்து வளர்ச்சித் திட்டங்களையும் கொள்கைகளையும் காலநிலை மாற்றப் பார்வையில் பார்த்து ஆய்வுசெய்து செயல்படுத்த உள்ளது **‘திராவிட மாடல் அரசு’**.

அதன் ஒரு பகுதியாகத்தான், சூரிய ஒளி, காற்றாலை உள்ளிட்ட புதுப்பிக்கக்கூடிய ஆற்றலைப் பயன்படுத்தி உற்பத்தியாகும் மின்சாரத்தைப் பெருக்குவது, காற்று, ஒலி மாசைக் குறைக்க மின் வாகனங்களுக்கு ஆதரவு தருவது, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, வளங்குன்றா வளர்ச்சி ஆகிய துறைகளில் புதிய நிறுவனங்களைத் தொடங்குவோருக்குச் சிறப்புச் சலுகைகள் போன்ற திட்டங்களைத் தீட்டி வருகிறது நம் கழகத் தலைவர் முதலமைச்சர் தலைமையிலான அரசு.

“மானுடத்தின் மிக முக்கியப் பிரச்சினையாக காலநிலை மாற்றம் இருக்கிறது. இதனை தமிழ்நாடு அரசும் மிக முக்கியப் பிரச்சினையாகக் கருதுகிறது என்பதை ஆட்சிக்கு வந்தது முதல், நான் தொடர்ந்து சொல்லி வருகிறேன். அதனால்தான், இந்தியாவிலேயே மற்ற மாநில அரசுகளுக்கு முன்மாதிரியாக காலநிலை மாற்ற இயக்கத்தைத் துவக்கி வைப்பதில் நான் பெருமை அடைகிறேன்.

இதனை ஒரு வரலாற்றுக் கடமையாக மட்டுமல்ல; எனது வாழ்க்கைக் கடமையாகவும் நான் பார்க்கிறேன்” என்று ‘காலநிலை மாற்ற இயக்க’ தொடக்க விழாவில் முழங்கினார் நம் முதலமைச்சர். அந்தக் கடமையில் நாமும் கைகோர்ப்போம்... சூழல் காப்போம்..!

**...சாதனை தொடரும்**

### செயல் புதிது... சூழல் புதிது!

திராவிட மாடல் அரசு ஆட்சிக்கு வந்த 2021 மே முதல் இப்போதுவரை அறிவிக்கப்பட்ட புதிய திட்டங்கள்...

❖ பாக் வளைகுடாவில் இந்தியாவின் முதல் ‘கடல் பசு பாதுகாப்பகம்’, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களை உள்ளடக்கியது.

❖ ‘கழுவேலி பறவைகள் சரணாலயம்’, விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களை உள்ளடக்கியது.

❖ நஞ்சராயன் குளம் பறவைகள் சரணாலயம், திருப்பூர்.

❖ கடவூர் தேவாங்கு சரணாலயம், கரூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களை உள்ளடக்கியது.

❖ தந்தை பெரியார் வனவிலங்கு சரணாலயம், ஈரோடு.

❖ காவிரி தெற்கு காட்டுயிர்க் காப்பகம், கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களை உள்ளடக்கியது.

### மஞ்சள்... மஞ்சள்!

‘அகத்தூய்மை வாய்மைக்கு! புறத்தூய்மை வாழ்வுக்கு!’ என்பார் நம் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அந்த வழியை மக்களும் கடைப்பிடிக்க வேண்டும் என்ற காரணத்தினால்தான் **‘மீண்டும் மஞ்சள் பை’** எனும் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது ‘திராவிட மாடல் அரசு’. ஒருமுறை பயன்படுத்திவிட்டுத் தூக்கியெறியப்படும், மண்ணில் மக்காத பிளாஸ்டிக் கழிவுகளால் மண்ணுலகம் மட்டுமல்லாது, கடல் உலகமும் பெருமளவில் பாதிக்கப்பட்டு வருகிறது. நெகிழிக்குப் பதிலாக மீண்டும் மீண்டும் பயன்படுத்தத்தக்க, எளிதில் மக்கக் கூடிய துணிப்பைகளைப் பயன்படுத்த மக்களிடையே விழிப்புணர்வை உருவாக்க, அரசு உயர் அதிகாரிகள் முதற்கொண்டு பலரும் அதைப் பொதுவெளியில் பயன்படுத்தத் தொடங்கி, மஞ்சள் பையை ஒரு ‘ஃபேஷன் ஸ்டேட்மென்ட்’ ஆக்கியது நம் அரசின் குறிப்பிடத் தகுந்த சாதனை!

### அக்கறை ஆசிரியர்!



அர்ப்பணிப்பும் அக்கறையும் கொண்ட ஆசிரியர்கள் எப்போதும் போற்றுதலுக்குரியவர்கள். அந்த வகையில், பாராட்டுக்குரிய பண்பாளராக உயர்ந்து நிற்கிறார் ஆசிரியர் தினகரன்.

வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு அடுத்து ஆந்திர மாநில எல்லையை ஒட்டி அரவட்லா, பாஸ்மார்பெண்டா போன்ற மலைக் கிராமங்கள் உள்ளன. பாஸ்மார்பெண்டா கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளியில், இடைநிலை ஆசிரியராகப் பணியாற்றுகிறார் தினகரன். அந்தப் பள்ளியில், அப்பகுதியைச் சேர்ந்த மலைக் கிராமங்களைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர். அவர்கள் பள்ளிக்கு வருவதில் உள்ள சிரமங்களை உணர்ந்த தினகரன், தனது சொந்தச் செலவில் ஆட்டோ வாங்கியதுடன், தானே ஓட்டிச் சென்று பள்ளி மாணவர்களை அழைத்து வரவும் செய்கிறார். அவரது முயற்சியும் ஆர்வமும் மாணவர்களின் கற்கும் ஆற்றலையும் அதிகரித்துள்ளது. பள்ளி திறந்து சில நாட்களிலேயே இவரது இந்த தன்முனைப்பு கவனம் ஈர்க்கிறது. கல்வி கற்கும் சூழலை எளிதாக்கும் ஆசிரியர்களே மாணவர்களின் முன்மாதிரியாகின்றனர். அரசின் இலக்கும் எளிதாகிறது.

### ஃப்ளாஷ்பேக்



### ‘மகராஜ’ சந்தை!



சங்கரலிங்கம்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1999 - ஆம் ஆண்டு உழவர் சந்தைத் திட்டத்தை அறிவித்தார். அதன் பின்னர் முக்கிய தினங்களில், தமிழ்நாடு முழுவதும் பல நகரங்களில் உழவர் சந்தைகள் திறக்கப்பட்டன. 2000-வது ஆண்டில் பாளையங்கோட்டை மகராஜ நகர் பகுதியில் உழவர் சந்தை திறக்கப்பட்டது. தலைவர் கலைஞர், தயாளு அம்மாள், வீரபாண்டியார், ஆற்காட்டார், துரைமுருகன் ஆகியோர் பங்கேற்றுச் சிறப்பித்தனர். அவர்களுடன், அன்றைக்கு அப்பகுதி கவுன்சிலராக இருந்த நானும் பங்கேற்றது, என் வாழ்நாளில் மறக்கமுடியாத நிகழ்வு என்பேன்.

**-எஸ்.சங்கரலிங்கம்,**
**துணை அமைப்பாளர்,**
**தி.மு.க. மாநகர**
**இலக்கிய அணி.**


இது போன்ற அரிய புகைப் படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

### கருவூலம்

**சட்ட நகல் எரிப்பு!**

**1963-ஆம் ஆண்டு, ஆட்சிமொழி பற்றிய அரசியலமைப்புச் சட்டப் பிரிவை எரித்திடும் அறப்போராட்டத்தை அறிவித்திருந்தது கழகம். முதற்களமாக சென்னையும், இரண்டாவது களமாக மதுரையும் தேர்வு செய்யப்பட்டிருந்தன. மதுரை அறப் போட்டத்துக்கு தலைமைக் கழகத்தின் சார்பில், பார்வையாளராக கலைஞர் சென்றிருந்தார். ஆனால், மதுரையில் நடந்த சட்டநகல் எரிப்புப் போராட்டத்துக்கு கலைஞர் தலைமை தாங்கினார் என வழக்குப் பதிவு செய்யப்பட்டு, சென்னை திரும்பிய அவர் கைது செய்யப்பட்டார். மதுரையில் சிறிய சிறைவாசத்துக்குப் பின்னர், உயர்நீதிமன்ற நிபந்தனையுடன் வெளிவந்தார்.**

### திராவிடத்தால் வாழ்கிறோம் 153




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131